ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1997/14 - 2016 දෙසැම්බර් මස 14 වැනි බදාදා - 2016.12.14

*1997/14 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 14 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1980 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நகர அபிவிருத்திக் கருத்திட்ட (விசேட ஏற்பாடுகள்) சட்டம்***

*2 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1980 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நகர அபிவிருத்திக் கருத்திட்ட (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகிய நான், நகர அபிவிருத்தி எனும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் பரிந்துரையின் பேரில் இங்கு கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிப் பகுதியை, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் விடுதியை நிர்மாணிப்பதற்காக உடனடியாகத் தேவைப்படுகின்றது என நான் கருதுவதனால், குறிப்பிட்ட காணியை தொடர்புடைய நோக்கத்திற்குத் தேவைப்படுகிறதென இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.*

*மைத்திரிபால சிறிசேன,*
*சனாதிபதி.*

*சனாதிபதி செயலகம்,*
*கொழும்பு ,*
*2016, திசெம்பர் 08,*

**அட்டவணை**

மேல் மாகாணம் , கொழும்பு மாவட்டத்தின் மஹரகம நகர சபை எல்லையினுள் மஹரகம பிரதேச செயலகப் பிரிவின், கங்கொடவில தெற்கு கிராம அலுவலர் பிரிவினுள் அமைந்துள்ள தள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள சுமார் 0.560 ஹெக்டெயார் அளவான லங்சியா தெணிய எனும் பெயருடைய காணிக்கு உரியதான எல்லைகள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளன :-

| | | |
|---|---|---|
| வடக்கு | : | அந்திரிஸ் மாவத்தை இரண்டாவது ஒழுங்கை ; |
| கிழக்கு | : | தனியார் வீதி; |
| தெற்கு | : | அனுஷ்கா சுபாஷினி கோனகல உரிமைகோரும் அந்திரிஸ் மாவத்தையில் சோலைவரி இல. 115/45 ஐக் கொண்ட இடமும் அந்திரிஸ் மாவத்தையும் ; |
| மேற்கு | : | அந்திரிஸ் மாவத்தை இரண்டாவது ஒழுங்கை. |

*12- 1118*